3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஒத்திவைப்பு தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். கூட்டத்தொடர் முடியப்போகிறது. எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அறிவிப்பாரா? (குறுக்கீடு)*

(ஆ) காவிரி கடைமடைப் பகுதிகளின் பாசனத்திற்குத் தண்ணீர்

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விவசாயிகள் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், மேட்டூரிலே தண்ணீர் திறந்துவிட்டதனாலே. அநேகமாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் போன்ற மாவட்டங்களிலே நேரடி விதைப்பு இருந்தது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 24,000 கன அடி தண்ணீர் திறந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், இன்றுவரையில் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் போகவில்லை. நிறைய பிரச்சினையாக இருக்கிறது. ஆதலால், அந்தத் தண்ணீரைக் கொஞ்சம் அதிகப்படியாகத் திறந்துவிட்டு இந்த ஒரு மாதம் (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன், இந்த ஒரு மாதம் தண்ணீர் இருந்தால், அடுத்த மாதம் season நமக்கு தொடங்கிவிடும், தண்ணீர் தேவைப்படாது. நீங்கள் முறைவைத்து தண்ணீர் விடலாம். நேரடி விதைப்பு இருக்கிறதனாலே அந்த விவசாயிகள் நிறைய பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லையென்று தொடர்ந்து தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு கேட்கிறார்கள். அதனாலே தண்ணீர் திறந்துவிடுவதை அதிகப்படுத்தி, எல்லா கடைமடைப் பகுதிகள் வரைக்கும் தண்ணீர் சென்றடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து, காவிரி டெல்டா பாசனத்திற்காக 18,000 கன அடி தண்ணீர் விடுவிக்கப்பட்டு விவசாய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடைமடைப் பகுதிகளுக்கு நீர் வந்து சேரவில்லை என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்து சேர்ந்த உடனே, 24,000 கனஅடியாக விடுவிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) முறைவைத்து பாசனம் செய்து வந்த*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 செப்டம்பர் 28

நிலையை மாற்றி, அனைத்துப் பகுதிகளுக்கும் தொடர்ந்து நீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் (குறுக்கீடு)

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், 24,000 கன அடி தண்ணீர் திறந்துவிட்ட பிறகும்கூட கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் போய்ச் சேரவில்லையென்று இங்கே தெரிவிக்கிறார். நிலைமை ஆராயப்படும்; தேவையிருப்பின் கூடுதலான தண்ணீர் விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

4. உரிமை மீறல் பிரச்சினை

துணை மானியக் கோரிக்கைகள் பற்றி முன்னாள் முதலமைச்சர் முரசொலி பத்திரிகையில் வெளியிட்டுள்ள கருத்துகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் ஏதோ பேசவேண்டும் என்கிறார்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் பற்றிய வாதங்கள் பேரவையிலே நடந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கும் அந்த வாதங்கள் தொடர்கின்ற நிலையிருக்கின்றது. எனவே, இந்தத் துணை மதிப்பீடுகளிலே நிதி ஒதுக்கம் செய்யவில்லை என்பதை இந்த அவையிலேயே வாதம் செய்யலாம். அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, இந்த அவை நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அவைக்கு வெளியிலேயிருந்து சரமாரியான அறிவிப்புகளும், சவுரி முடிகளும் என்கின்ற தலைப்போடு இந்த அவையினுடைய நடவடிக்கைகளைப் பற்றி விமர்சனமும் வந்திருக்கிறது. அதிலே, ஏதோ இந்த அரசு தமிழக மக்களை ஏமாற்றுகின்றது போலவும், பல்வேறு